**தலைப்பு 281 - கமநல அபிவிருத்தித் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 281 - கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 யூலை 31 ஆந் திகதி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஓதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த ஏற்பாடும் செலவும்**

---

திணைக்களத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 8,583.40 மில்லியனாக இருந்ததுடன், இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 7,590.32 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த தேறிய நிதி ஏற்பாடுகளில் ரூபா 993.08 மில்லியன் அதாவது 11.57 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 6,920.40 | 6,676.10 | 244.30 | 3.53 |
| மூலதனம் | 1,663.00 | 914.22 | 748.78 | 45.03 |
| மொத்தம் | **8,583.40** | **7,590.32** | **993.08** | **11.57** |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல்**

பல்வேறு செயற்பாடுகளுக்காக திணைக்களத்திற்கு 02 அமைச்சினாலும் 02 திணைக்களங்களாலும் ரூபா 2,467.82 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதில் 1,073.22 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளில் ரூபா 1,403.61 மில்லியன் அல்லது 56.66 சதவீதமான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 28101 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 250.00 | 206.56 | 192.00 | 226.22 | 600.00 | 357.34 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

2016 திசெம்பர் 31 இல் கட்டுநிதிக் கணக்கு மீதி ரூபா 1.77 மில்லியனாக இருந்தது.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழ் 07 வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகள் ரூபா 418.22 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **வைப்புக் கணக்கு இலக்கம்** | **2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0006/0051/000 | 168.06 |
| 6000/0000/00/0002/0010/000 | 10.78 |
| 6000/0000/00/0001/0010/000 | 0.01 |
| 6000/0000/00/0013/0024/000 | 1.31 |
| 6000/0000/00/0018/0011/000 | 6.89 |
| 6000/0000/00/0016/0009/000 | 139.41 |
| 6000/0000/00/0013/0032/000 | 91.76 |
| **மொத்தம்** | **418.22** |

## 2.5 கணக்காய்வு அவதானிப்புகள்

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

# 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 3.1 கணக்குகளைச் சமர்ப்பித்தல்

திணைக்களத்தினால் 2017 பெப்ரவரி 28 ஆந் திகதி அளவில் கமநல சேவை நிலையங்களின் கணக்குகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 560 கமநல சேவை நிலையங்களில் 77 கமநல சேவை நிலையங்கள் 2016 ஆம் ஆண்டிற்கான கணக்குகளை கணக்காய்விற்காக குறித்த திகதியில் சமர்ப்பித்திருக்கவில்லை. மேலும் திணைக்களமானது கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாத கடந்தகால கணக்குகளின் முன்னேற்ற அறிக்கை, சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் முன்னேற்ற அறிக்கை என்பவற்றை பேணவில்லை.

| **ஆண்டு** | **சமர்ப்பிக்கப்படாத கணக்குகளின் எண்ணிக்கை** |
|---|---|
| 2006 | 36 |
| 2007 | 34 |
| 2008 | 31 |
| 2009 | 25 |

| | |
|---|---|
| 2010 | 12 |
| 2011 | 10 |
| 2012 | 13 |
| 2013 | 18 |
| 2014 | 26 |
| 2015 | 33 |
| 2016 | 77 |
| மொத்தம் | 315 |

## 3.2 ஏடுகளும் பதிவேடுகளும் பேணப்படாமை

திணைக்களத்தால் கீழே காட்டப்பட்டுள்ள பதிவேடு முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணங்கள் |
|---|---|---|
| (i) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் |
| (ii) | கணனி, துணைக் கருவிகள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் |
| (iii) | அடியிதழ் சேர் புத்தகப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 341 |
| (iv) | மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 454 (2) |
| (v) | பிணைப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 891(1) |
| (vi) | வாகனங்கள் பட்டியல்படுத்தும் பதிவேடு | நிதிப் பிரமாணம் 1647(உ) |

## 3.3 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்தினால் பேணப்பட்ட பொது வைப்புக் கணக்கு மீதிக்கும் திறைசேரி பிரதி மீதிக்கும் இடையில் வேறுபாடு காணப்பட்டது. ஆயினும் அந்த வேறுபாடுகளை நிதி ஒழுங்கு விதி 427 இன் படி இணக்கம் செய்யப்படாமல் மீளாய்வாண்டின் இறுதியில் காணப்படுகிறது.

(ஆ) நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் அநுராதபுர மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் காணப்படும் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 03 வைப்புக்கள் ரூபா 167,213 தொடர்பாகவும் மற்றும் ரூபா 1,675,994 தொகையான வைப்புக்கள் தொடர்பாகவும் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 அரசாங்க உத்தியோகத்தர்கள் முற்பணக் கணக்கு

28101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத் திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 23,766,309 ஆகக் காணப்பட்டதுடன், அந் நிலுவைகளில் ரூபா 18,664,628 மீதிகள் 01 ஆண்டு முதல் 05 ஆண்டுகள் வரையான கால கடந்திருந்ததுடன் , ரூபா 486,944 மீதிகள் 07 ஆண்டுகளை கடந்திருந்ததுடன் அவை அலுவலர்களிடமிருந்து மீள அறவிடப்பட வேண்டியனவாக இருந்த போதும் அவ் அலுவலர்கள் மாகாண சபை அலுவலர்களாக உள்ளீர்க்கப்பட்டுள்ளதுடன் திணைக்களம் மீளாய்வாண்டின் இறுதியின் போதும் குறித்த தொகையை அறவிடுவது தொடர்பான நடவடிக்கையை எடுக்கத் தவறி உள்ளது.

(ஆ) தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகை கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதியுடன் இணக்கம் செய்த போது ரூபா 1,929,786 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டதுடன், 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் திணைக்களம் குறித்த வேறுபாட்டை இணக்கம் செய்வதற்கான நடவடிக்கையை எடுக்காமை அவதானிக்கப்பட்டது.

(இ) 07 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தீர்வு செய்யப்படாமல் இருந்த இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,968,933 ஆக இருந்ததுடன் அம் மீதியை 2004 ஒக்டோபர் 11 ஆந் திகதி 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் உத்தியோகத்தர்கள் இடம்மாற்றம் பெற்றுச் சென்ற நிறுவனத்திடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கையை எடுக்கத் தவறியுள்ளது.

### 3.5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### 3.5.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டுக்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் சிறிய குளங்கள் கால்வாய்களின் புனருத்தாரன வேலைக்காக ரூபா 2,000 மில்லியனும் சிறிய நீர்ப்பாசன மற்றும் கைவிடப்பட்ட வயல் நிலங்களின் அபிவிருத்திக்கு ரூபா 1,320 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் திணைக்களத்தினால் புனருத்தாரனம் செய்யப்படவேண்டிய குளங்கள் கால்வாய்கள் அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை.

#### 3.5.2 வருடாந்த பெறுகைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வருடாந்த புது அரிசி உற்சவத்துக்கு அவசியமான மூலப்பொருட்கள் கருவிகள் உள்ளடங்கலான முழுமையான வழங்கல்களின் கொள்வனவானது ஆண்டு பெறுகைத்

திட்டத்தில் உள்ளடக்கப்படுவதுடன் பெறுகை செயன்முறைகளை பின்பற்றி மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும் அநுராதபுர மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவு ரூபா 2,000,000 அரசாங்க பெறுகை வழிகாட்டலின் ஏற்பாடுகளை பின்பற்றாமல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ) பெறுகை வழிகாட்டல் 5.4.6 ஆம் இலக்க பந்தியின் பிரகாரம் பிடித்து வைத்தல் பணமானது ஒப்பந்தகாரர்களுக்கு குறைபாட்டு பொறுப்புக்கால முடிவில் மீள செலுத்தப்பட வேண்டும். இருப்பினும் 2014 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குரிய 14 ஒப்பந்தகாரர்களின் பிடித்து வைத்தல் பணமாகிய ரூபா 547,071 தொகை மீளாய்வாண்டின் போதும் தீர்ப்பனவு செய்யப்படாமல் உள்ளது.

(இ) அநுராதபுர மாவட்டத்தினது பதவியா ஜயவீர விவசாய வீதிக்கு சரளை இடல், கண்டி மாவட்டத்தின் ஏனைய 10 செயற்திட்டங்களுக்கான ஒப்பந்தமானது முறையே ரூபா 970,817 , ரூபா 8,857,465 என்னும் தொகைக்கு வழங்கப்பட்டது. எனினும் இது ஒப்பந்த உடன்படிக்கையின் பிரிவு இல 17 க்கு முரணாக உப ஒப்பந்தமாக வழங்கப்பட்டுள்ளது.

### 3.5.3 உள்ளகக் கணக்காய்வு

கணக்காய்வு திட்டப்படி 13 கணக்காய்வு நிகழ்ச்சிகளை தாபன விதி ,பெறுகை, நிர்மாணிப்பு மற்றும் பராமரிப்பு விடயங்களில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டில் மேற்குறிப்பிட்டவற்றில் ஒரு விடயத்தில் மட்டுமே கணக்காய்வு நிகழ்ச்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் கணக்காய்வு நிகழ்ச்சிகளை கமநல சேவை நிலையங்கள் , கமத்தொழில் வங்கிகளின் வழிகாட்டல் செயற்திட்டங்களில் முறையே 144 , 72 ஐ மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் அவற்றில் முறையே 77 , 34 நிகழ்ச்சிகளும் 24 விசேட பரீட்சிப்புக்களும் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தன.

### 3.5.4 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆம் திகதிய 420 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தால் நிதியாண்டு பூர்த்தியடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2015 , 2016 ஆம் ஆண்டுகளுக்குரிய அவ்வறிக்கைகள் 2017 யூலை 18 ஆம் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

கீழே விபரிக்கப்பட்டவாறு சில சொத்துக்கள் விளைவற்றும் குறைவான பயன்பாட்டுடனும் நிலவியமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

(i) கமநல சேவை நிலையங்களின் விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| கமநல சேவை நிலையம் | சொத்து வகை | தொகை | பெறுமதி | குறைவாகப் பயன்படுத்தப்பட்ட காலப்பகுதி |
|---|---|---|---|---|
| தம்பகல்ல | கியூபோட்டா உழவு இயந்திரம் , டேலர் | 01 | - | 17 ஆண்டுகள் |
| கதிர்காமம் செவனகல | விதை மற்றும் விவசாய உற்பத்தி நிலையம் | 03 | - | 03 ஆண்டுகள் |
| புத்தளம் | விற்பனை நிலையம் | 02 | 5,682,000 | 03 ஆண்டுகள் |
| மாலபே | பிறைம்ஓவர் இயந்திரம் | 01 | - | 02 ஆண்டுகள் |

(ii) புத்தள கமநல சேவை நிலையத்துக்கு உரித்தான 03 செயற்படா நிலையிலுள்ள ரூபா 2,311,224 பெறுமதியான உழவு இயந்திரங்கள் மற்றும் ஒரு டேலர் என்பவற்றை விற்பதற்குரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) 19 மாவட்ட அலுவலகங்களில் 320 நான்கு சக்கர உழவு இயந்திரம், 72 இரண்டு சக்கர உழவு இயந்திரம், 136 டேலர்கள் மற்றும் பொருத்தமான கருவிகள் விளைவற்று 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்படுகிறது.

(iv) 05 மாவட்ட அலுவலகங்களுக்கு வழங்கப்பட்ட 50 டோசர்களில் 2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் 14 இயங்கா நிலையிலும் 07 இயந்திரங்கள் விளைவற்றும் காணப்படுகின்றன.

(v) திணைக்களத்துக்குச் சொந்தமான 155 அரச தங்குமிடவிடுதிகளில் 54 திருத்தப்பட வேண்டியனவாகவும் 44 விளைவற்றும் காணப்படுகின்றன.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்படுதல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2016 மார்ச் 31 ஆம் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2016 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு திணைக்களத்தினால் 07 மாவட்ட அலுவலகங்களினது அவ்வறிக்கைகள் 2017 யூலை 14 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2004 ஒக்தோபர் 14 ஆந் திகதிய 174 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் 80 சொத்துக்களுக்கு உரிய குறியீட்டு இலக்கங்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ii) திணைக்களத்திற்குச் சொந்தமான புல்டோசர் இயந்திரங்கள் தொடர்பான பொருள் மெய்மையாய்வு அறிக்கையொன்று மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) ஏனைய கட்சியினர்களுக்கான சொத்துக்களின் விடிவிப்பு**

திணைக்களத்தினால் 03 வாகனங்கள் ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளன.

**(ஈ) கையகப்படுத்தப்படாத சொத்துக்களின் முறைசாராப் பயன்பாடு**

ஏனைய திணைக்களங்களினாலும் நிறுவனங்களினாலும் வழங்கப்பட்ட 12 வாகனங்களை சட்ட ரீதியாக உடமையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. மேலும் உலக உணவு செயற்திட்டத்தினால் வழங்கப்பட்ட ஜீப் வண்டி பதிவு செய்யப்படாமலும் பயன்படுத்தப்படாமலும் திணைக்களத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

**3.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) **2000 இன் 46 ஆம் இலக்க கமத்தொழில் அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின்** | |
| • 51(1) ஆம் பிரிவு | கமநல அபிவிருத்தி சபை மற்றும் அதற்கான அலுவலகங்கள் நிறுவப்பட்டிருக்கவில்லை. |
| • 53(1) ஆம் பிரிவு | விவசாய காணிகள் தொடர்பான திருத்தங்களும் மீளமைப்புக்களும் செய்யப்படாமை கமநல சேவை நிலையங்களின் தெரிவுக் கணக்காய்வு பரிசோதணையின் போது அவதானிக்கப்பட்டது. |
| • 81(2) ஆம் பிரிவு | கமக்காரர் ஒழுங்கமைப்புக்களினால் மேற்கொள்ளப்படும் நீர்ப்பாசன வேலைகளின் மேற்பார்வை , நிர்வகிப்பு தொடர்பான சட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| • 56(3) மற்றும் (4) ஆம் பிரிவு | ஏக்கர் வரிக் கொடுப்பனவை செலுத்தத் தவறியவர்கள் தொடர்பாக எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. |

(ஆ) **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவை**

--------------------------------------------

| | |
|---|---|
| (i) 2015 யூலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் திருத்திய 371 ஆம் இலக்க நிதிப்பிரமாணம் | பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு ஆகக் கூடுதலான நிமித்த உப கட்டுநிதியாக ரூபா 100,000 தொகையை வழங்கக்கூடிய போதும் 04 சந்தர்ப்பங்களில் இந்த எல்லையை மீறி ரூபா 200,000 தொடக்கம் ரூபா 1,000,000 வரை உப கட்டுநிதி வழங்கப்பட்டுள்ளது.<br><br>மேலும் நிதிப்பிரமானம் 371(5) இன் பிரகாரம் நிமித்த உப கட்டுநிதியானது வழங்கப்பட்ட குறித்த பணிகள் நோக்கம் நிறைவடைந்து 10 நாட்களில் மீள திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய போதிலும் திணைக்களமானது ரூபா 1,664,064 தொகையான உப கட்டுநிதியினை 25 தொடக்கம் 117 நாட்களுக்குள்ளும் , பயன்படுத்தாத உப கட்டுநிதி தொகையினை 61 தொடக்கம் 115 நாட்களுக்குள்ளும் காலம் தாழ்த்தி மீள திருப்பிச் செலுத்தியும் உள்ளது. |
| (ii) நிதிப்பிரமாணம் 396(ஈ) | 17 மாவட்ட அலுவலகங்களின் வங்கிக் கணக்குகளிலும் தலைமை அலுவலக வங்கிக் கணக்கிலும் வழங்கப்பட்டு 6 மாதம் கடந்தும் கொடுப்பனவிற்கு வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத காலாவதியான காசோலைகள் ரூபா 1,297,701 தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 756(3) | கமநல சேவை நிலையங்களில் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத / காலாவதியான பசளை, விவசாய இரசாயனங்கள், விதைகள் மற்றும் விவசாய உபகரணங்கள் போன்ற இருப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**(இ) ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கைகள்**

-----------------------------------------------------

(i) 2012 பெப்ரவரி 29 ஆந் திகதிய 04/2012 ஆம் இலக்க (கமத்தொழில் வங்கி) கமத்தொழில் அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கை

- 3.4.2 ஆம் பந்தி

  விவசாயம் சார்ந்த கடன் தீர்ப்பனவின் கூடிய காலஎல்லை 06 மாதங்களாக இருந்த போதிலும், 1998 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டிருந்த கடன்களில் ரூபா 220,356,822 தொகை நிலுவையாக காணப்பட்டன. அதில் ரூபா 98,707,370 தொகை 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக இருந்து வந்தன.

- 4.4.2 ஆம் பந்தி

  கமத்தொழில் வங்கிக்கு வழங்கப்பட்டிருந்த மூலதனத் தொகைகள் 5 ஆண்டுகளிற்குள் மீளளிக்கப்பட வேண்டிய போதிலும், 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 236 கமத்தொழில் வங்கிகளால் மீளச் செலுத்தப்படாதிருந்த நிலுவை மூலதனத் தொகை ரூபா 253,404,346 ஆக இருந்தன.

(ii) 2016 ஜனவரி 07 ஆம் திகதிய 01/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை

மீளாய்வாண்டில் கண்டி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட 27 சிறிய நீர்ப்பாசன புனருத்தாரன வேலைகளுக்கு மேலதிக நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்பு 34 சதவீதத்திலிருந்து 38 சதவீதமாக உள்ளன.

சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்திட்ட வகைகளுக்கேற்ப முன்னுரிமை வழங்கப்பட்டிருக்கவில்லை.
செயற்திட்டங்களை குறித்த காலத்தில் அடையாளம் காணல், செயற்திட்டம் ஆரம்பிக்கும் பூரணப்படுத்தும் காலம் , பின்னூட்ட மதிப்பீடுகள் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். எனினும் அவை மேற்கொள்ளப்படவில்லை.

| | |
|---|---|
| (iii) 2016 நவம்பர் 29 ஆந் திகதிய 7/13/L/1(v) இலக்க கடிதத்தின் 2 ஆம் பந்தி | 35 மீற்றருக்கு மேற்பட்ட சீமெந்து வேலைகளினதும் நீர்ப்பாசன வேலைகளினதும் இறுதிக் கொடுப்பனவின் போது மாலபேயில் அமைந்துள்ள தரக்கட்டுப்பாட்டுப் பிரிவிலிருந்து தரக்கட்டுப்பாட்டு அறிக்கையை எடுக்கத் தவறியுள்ளது. |
| **(ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு** | |
| 2.4.1 இலக்க பெறுகை வழிகாட்டு நெறி | தம்புள்ள கமநல சேவை நிலையத்தினால் 5 தடவைகள் தொழினுட்ப மதிப்பீட்டுக் குழவை நியமிக்காதும் அதனது அனுமதி இல்லாதும் ரூபா 486,276 பெறுமதியான கணினிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. |

## 3.8 உள்நாட்டு நிதிகளின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்

செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடுதல், பூரணப்படுத்தாது கைவிடல், செயற்திட்ட தாமதங்கள் தொடர்பான கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

### (அ) செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடுதல்

கீழ்வரும் அவதானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) மீளாய்வாண்டில் கேகாலை மாவட்டத்தின் 04 சிறிய நீர்ப்பாசன புனருத்தாரன செயற்திட்டத்துக்காக மொத்தமாக ரூபா 4,042,000 தொகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும் 2017 பெப்ரவரி 14 ஆம் திகதி வரை குறித்த ஏற்பாட்டை பயன்படுத்தும் எந்தவொரு செயற்திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அநுராதபுர மாவட்டத்தில் 15 செயற்திட்டத்துக்கு மொத்தமாக ரூபா 122.54 மில்லியனுக்கு அனுமதி வழங்கப்பட்ட போதும் அவை ஆரம்பிக்காது கைவிடப்பட்டுள்ளது.

(ii) அநுராதபுர மாவட்டத்தில் சிறிய குளங்கள் கால்வாய்களின் புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 11.70 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தைக் கொண்ட 06 செயற்திட்டங்களை பூர்த்திசெய்வதற்கான நடவடிக்கையை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) செயற்திட்டங்களை குறித்த திகதியில் பூரணப்படுத்தாமை

இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள குருவிட்ட இடந்தவலக் அணை , கொலன்ன மகாவெல அணைகளின் புனருத்தாரன வேலைகளுக்கு முறையே ரூபா 688,179, ரூபா 846,062 தொகைக்கு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் ஒப்பந்தத்தில் புனருத்தாரன வேலைகள் மீளாய்வாய்டின் போது பூரணப்படுத்தப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்ட போதும் அவை பூரணப்படுத்தப்படாமையால் 421 பயனாளிகள் அதனிலிருந்தான அனுகூலங்களை இழந்துள்ளனர்.

**(இ) முன்னேற்றம் குறைவான வேலைகள்**

கீழ்வரும் அவதானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) அநுராதபுர மாவட்டத்தின் மலிகதன்னா குளத்தின் புனருத்தாரன வேலைக்கான ஒப்பந்தம் மதிப்பிடப்பட்ட கிரயமாக ரூபா 4,331,025 தொகையை கொண்டிருந்தது . பௌதீக மெம்மையாய்வின் போது மலிகதன்னா குளத்தைச் சூழ 15 ஏக்கர் அறுவடை செய்யக்கூடிய விவசாயக் காணிகளை உடைய 15 விவசாயக் குடும்பங்கள் வாழ்கின்ற போதும் 2017 ஏப்ரல் மாதம் வரை அவர்கள் அங்கு எந்தவிதமான அறுவடை நடவடிக்கையிலும் ஈடுபட்டிருக்கவில்லை.

(ii) கண்டி மாவட்டத்தின் 05 சிறிய நீர்ப்பாசன புனருத்தாரன வேலைகளுக்காக ரூபா 3,903,520 செலவிடப்பட்ட போதும் குறித்த கால்வாய்கள் 2017 யூன் மாதம் வரை உபயோகப்படுத்தப்படாமல் காணப்பட்டமையினால் குறித்த செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட விவசாயக் காணிகளிலிருந்து அறுவடை செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) மாத்தளை , கண்டி மாவட்டங்களில் 2010 , 2013 , 2015 , 2016 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட முறையற்ற சிறிய நீர்ப்பாசன புனருத்தாரன வேலைகளினால் கால்வாய்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்டிருந்த நன்மைகளை பெறமுடியாதிருந்தது.

**(ஈ) செயற்திட்டங்களின் சூழல் தாக்கம்**

ஒருவெல லண்டா குளத்தின் புனருத்தாரன வேலையில் மலையை தகர்க்கும் போது சூழல் , உயிரியல் ஆபத்து தொடர்பாக சூழல் மதிப்பாய்வு அறிக்கையினை பெற்றிருக்கவில்லை. மேலும் கூனியங்கல குளத்தைச் சூழ சூழலியல் ஆபத்து ஏற்பட்டிருந்தது.

## 3.9 செயலாற்றல்

2016 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க திணைக்களத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) பிரதான செயற்பாட்டுக்கு எதிரான செயற்பாடுகள்**

இரத்தினபுரி மாவட்டத்தில் 2015 ஆம் ஆண்டில் சேதனப் பசளை உற்பத்தி மற்றும் பயன்பாட்டு ஊக்குவிப்பு நிகழச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 15,041,113 தொகை விவசாயப் பூங்கா செயற்திட்டத்துக்காக செலவிடப்பட்டது. மேலும் குறித்த செயற்திட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதி மற்றைய செயற்திட்டத்துக்கு பயன்படுத்தப்பட்டமை , கமநல சேவை நிலையங்களின் நிலங்கள் திட்டமிட்டவாறு ஒழுங்காக பயன்படுத்தப்படாமை , பிராந்திய காலநிலைக்கு ஏற்றவாறான பயிரினம் தெரிவு செய்யப்படாமை , நிலங்களை பராமரிப்பதற்கான குறைந்தளவான ஆய்வுகூட வசதிகள் போன்ற அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(ஆ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான செயற்பாடுகள்**

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் பிரகாரம் திணைக்களத்தின் கீழே காட்டப்பட்டுள்ள பிரதான செயற்பாடுகள் நிறைவேற்றப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டன.

(i) கமநல சேவை நிலையங்களின் முறையான கண்காணிப்பின் கீழ் செயற்திறனை மேம்படுத்துவதற்காக 532 பரிசோதனை அறிக்கைகளை பெற்றுக்கொள்வதற்கு இலக்கிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது 435 பரிசோதனை அறிக்கைகள் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(ii) புத்தள மற்றும் கதிர்காம கமநல சேவை நிலையங்களினால் முறையே ரூபா 335,738 , ரூபா 78,400 தொகைகள் கமநல சேவை நிலையங்களை சிறிய விவசாய பூங்காக்களாக மாற்றும் செயற்திட்டத்தின் கீழ் குறிப்பிடப்படும் செயற்பாடுகள் அல்லாத பிற செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக செலவு செய்யப்பட்டுள்ளது.

**(இ) திட்டமிடல்**

---

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்படாமைக்கான எடுத்துக்காட்டுக்களும் அவை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட அவதானங்களும் கீழ்வருமாறு

(i) சிறிய நீர்ப்பாசனம் மற்றும் கைவிடப்பட்ட நிலங்களின் அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் 239 அணைக்கட்டுக்கள் , 457 நீர்ப்பாசனக் கால்வாய்களை நிர்மானிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் போது 98 அணைக்கட்டுக்கள் , 243 நீர்ப்பாசனக் கால்வாய்கள் மாத்திரமே நிர்மானிக்கப்பட்டன. மேலும் 30,000 ஹெக்டேயர் செய்கை பண்ணப்படாத வயல்களிலிருந்து அறுவடை செய்ய திட்டமிடப்பட்டிருந்த போதும் 5,950 ஹெக்டேயர்களில் மாத்திரமே அறுவடை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) விதைகளை பன்முகப்படுத்தும் செயற்திட்டத்துக்கு ரூபா 50 மில்லியன் நிதி ஏற்பாடு மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தது. அக் குறித்த செயற்திட்டத்திலிருந்து மேற்கொள்ள எதிர்பார்த்த முன்னேற்ற அறிக்கை கீழ்வருமாறு :

| ஏதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகள் | திட்டமிடப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை | பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை | பூர்த்தி செய்யப்படாத செயற்திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| கால்வாய் முறைமையின் வெள்ள தடுப்பு / கடல் நீர்த் தடுப்பு அணை அபிவிருத்தி | 41 | 18 | 23 |
| சோயான் முறைமை | 14 | 9 | 5 |

| | | | |
|---|---|---|---|
| சொட்டு நீர்ப்பாசன முறைமை | 143 | 67 | 76 |

**3.10 வங்கிக் கணக்குகளை செயற்படுத்துவதிலுள்ள குறைபாடுகள்**

**சீராக்கப்பட வேண்டிய மீதிகள்**

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் 2017 மே மாதத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்க கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த சீராக்கல்கள் தொடர்பான பகுப்பாய்வின் படி வெளிப்பட்ட தகவல்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சீராக்கல் தொடர்பான விபரம் | | காலப்பகுப்பாய்வு | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | 06 மாதங்களிற்கு மேல் 01 ஆண்டிற்கு குறைந்த | 01 ஆண்டிற்கு மேல் 03 ஆண்டுகளிற்கு குறைந்த | 03 ஆண்டுகளிற்கு மேற்பட்ட | |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வழங்கப்பட்டிருந்த போதிலும் கொடுப்பனவற்காக வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | 769,623 | 474,542 | 53,534 | 1,297, 699 |
| (ii) | இனங்காணப்படாத வரவு | - | 308,579 | 4,200 | 312,779 |
| (iii) | இனங்காணப்படாத செலவு வைத்தல்கள் | 20,293 | 374,572 | 3,198 | 398,063 |

**3.11 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

கீழ்வரும் அவதானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) செய்கை பண்ணப்படாத வயல்களை பயன்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 3,500,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குரிய பண்டாரகம தேர்தல் தொகுதியில் அமைந்துள்ள கோரளை வாய்க்காலை புனரமைப்புச் செய்வதற்காக இந் நிதி ஏற்பாடு நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் 2017 யூலை 20 ஆந் திகதி அளவிலும் அப்புனரமைப்பு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசாங்கம் மானிய உர விநியோகத் திட்டத்தினை இடைநிறுத்தியுள்ள போதும் திணைக்களத்தினால் 14 மாவட்டங்களில் 19 உரக் களஞ்சியசாலைகளை ரூபா 44,977,339 செலவில் மீளாய்வாண்டின் போது நிர்மாணிப்பதற்கு முன்னுரிமையளிக்கப்பட்டிருந்தது.

(இ) விவசாய வீதிகளின் புனரமைப்பானது மாகாண சபைகளினால் மேற்கொள்ளப்பட வேண்டும். இருப்பினும் அநுராதபுர மாவட்டத்தின் சுண்சுட்டுவ ரலப்பனவ விவசாய வீதி புனரமைப்பானது மாகாண சபையின் அனுமதி இல்லாது ரூபா 988,397 செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஈ) சாரா லங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சேதனப் பசளை உற்பத்தி மற்றும் பாவனையை மேம்படுத்துவதற்காக 21 மாவட்டங்களுக்கு ரூபா 50,000,000 நிதி ஏற்பாடு செய்யப்பட்டு அவற்றிலிருந்து 15 மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகளுக்கு ரூபா 32,800,000 வழங்கப்பட்டிருந்தது. குறித்த கடனானது வழங்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாத காலத்தின் பின்னர் மாதாந்த அடிப்படையில் மீளப்பெற வேண்டியனவாக இருந்த போதும் 2017 ஆகஸ்ட் 08 ஆந் திகதி வரையிலும் குறித்த கடன் தொகையில் ரூபா 199,213 மட்டுமே மீள அறவிடப்பட்டுள்ளது. இது வழங்கப்பட்ட கடன் தொகையில் 0.6 சதவீதமாகும்.

**3.12 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சிக்கனமற்ற விதத்தில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) ரம்புக்பொத்த கமநல சேவை நிலையத்தின் கட்டிடம் ரூபா 18,827,083 செலவில் 2009 ஆம் ஆண்டின் போது நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அக்கட்டிடம் அமைந்துள்ள காணியின் உறுதியற்றதன்மை தொடர்பாக தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பினால் சமர்ப்பிக்கப்பட்ட பரிசோதனை அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பரிந்துரைகள் முறையாக செயற்படுத்தப்படாமையால் கட்டிடம் கீழிறங்கியிருந்தது. 2014 ஆம் ஆண்டின் போது அந்நிர்மாணம் இடைநிறுத்தப்பட்டதுடன் அது தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இரத்தினபுரி மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களம் வாடகைக் கட்டிடத்தில் இயங்கிவரும் நிலையில் புதிய கட்டிடத்தை அமைப்பதற்காக ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட போதும் ஒப்பந்தக்காரர் குறித்த திகதியில் கட்டிடத்தை கையளிக்காததன் விளைவாக வாடகையாக ரூபா 960,000 செலுத்தப்பட்டது.

(இ) நீர்ப்பாசன தொழிற்துறையின் சிறிய நீர்ப்பாசன புனருத்தாரன வேலைகளுக்கான முன்னுரிமை பயனாளிகளின் எண்ணிக்கை குறைந்தளவு 10 காணப்படின் மட்டுமே

வழங்கப்பட வேண்டும். இருப்பினும் கண்டி மாவட்டத்தில் பயனாளிக் குடும்பங்கள் 10 ஐ விட குறைவாகக் காணப்பட்ட போதும் 11 செயற்திட்டங்கள் ரூபா 6,301,706 செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 3.13 நிதி ஒழுங்கீனமான கொடுக்கல் வாங்கல்கள்

கெக்கிராவ கிராமிய அபிவிருத்தி வங்கியின் நிலையான வைப்பில் காணப்பட்ட ரூபா 450,000 தொகை 2011 ஓகஸ்ட் மாதத்தில் பிராந்திய கமநல அபிவிருத்தி அலுவலரினால் அவரது தனிப்பட்ட கணக்கிற்கு வரவிலிடப்பட்டுள்ளது. அதன் விளைவாக அவரது சேவை முடிவுறுத்தப்பட்ட போதும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் குறித்த தொகை அவரிடமிருந்து மீள அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 3.14 நட்டங்களும் சேதங்களும்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டங்களும் சேதங்களும் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) அநுராதபுர மாவட்டத்திலுள்ள மரதங்கடவல கமநல சேவை நிலையத்தில் ரூபா 1,111,970 தொகையான நட்டங்கள் காணப்பட்ட போதும் நட்டங்கள் சேதங்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 யூலை 16 ஆந் திகதி விபத்திற்குட்பட்டிருந்த திணைக்களத்திற்குரிய வாகனமொன்று தொடர்பாக நிதிப்பிரமாணம் 103, 104, 109 இன் பிரகாரம் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.15 முகாமைத்துவ நலிவுகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் 26 ஆரம்ப புலனாய்வு நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பலாங்கொட ரத்மலவின்னா கமநல சேவை நிலையத்தில் பணியாற்றும் 09 விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களின் உரநிதிப் பாவணை தொடர்பான ஆரம்ப புலனாய்வு ,104(ஆ) நிதிப்பிரமாணப் பரீட்சைகள் 2008 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட போதும் 2016 யூலை 27 ஆந் திகதி வரையிலும் பூரணப்படுத்தப்பட்டிருக்காததுடன் இருப்பு பற்றாக்குறை ரூபா 1,667,250 குறித்த அலுவலர்களிடமிருந்து 2017 யூலை 12 ஆந் திகதி (கணக்காய்வு திகதி) வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) திகன கமத்தொழில் வங்கியின் 04 அலுவலர்களது பணத்தின் தவறான பயன்பாடுகள் ரூபா 1,077,451 தொகை காணப்பட்ட போதும் 104(1)(ஆ) நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் புலனாய்வு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சட்டரீதியான ஒழுக்காற்று விசாரணைகளின் பிரகாரம் 07 அலுவலர்களிடமிருந்து அறவிடப்படவேண்டிய தொகை ரூபா 517,200 ஆகக் காணப்பட்ட போதும் குறித்த தொகையை அறவிடுவதற்கான எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2015 ஆம் ஆண்டு கமக்காரர் நம்பிக்கை நிதியத்திலிருந்து சோள வளர்ப்பில் ஈடுபடும் 53,686 விவசாயிகளுக்கு கடன் வழங்குவதற்காக ரூபா 80,790,000 தொகை தற்காலிக கடனாக பெறப்பட்டிருந்த போதும் ரூபா 36,280,143 தொகை 2017 ஆகஸ்ட் 08 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீள்சுழற்சி நிதியத்திலிருந்து விவசாயிகளுக்கு ரூபா 91,654,083 தொகை வழங்கப்பட்டிருந்த போதும் ரூபா 9,962,027 தொகை 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை.

(எ) அநுராதபுர கமநல சேவை நிலைய 02 அலுவலர்களது நிதி முறைகேடுகளினால் 07 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் நிதி மற்றும் இருப்புப் பற்றாக்குறை ரூபா 364,111 மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஏ) விவசாயக் காணிகளை ஏனைய நோக்கங்களுக்கு பயன்படுத்துவதற்கான எழுத்துமூல அனுமதி வழங்கும் போது விசேட சட்டக் கட்டளை பெறப்பட்டிருக்கவில்லை.

## 3.16 மனித வள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணி

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை கீழே காட்டப்பட்டுள்ளன.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| i. | சிரேஷ்ட மட்டம் | 123 | 74 | 49 |
| ii. | மூன்றாம் மட்டம் | 645 | 485 | 160 |
| ii | இரண்டாம் மட்டம் | 16,066 | 13,175 | 2,891 |
| iv | ஆரம்ப மட்டம் | 1,543 | 585 | 958 |
| | மொத்தம் | **18,377** | **14,319** | **4,058** |

இதற்கு மேலதிகமாக 111 பட்டதாரிப் பயிலுனர்கள் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர்.

### (ஆ) ஏனைய தரப்பினருக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்

மீளாய்வாண்டின் போது திணைக்களத்தினால் 08 விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்கள் வேறு தரப்பினருக்கு விடுவிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.